ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 32 B

ஸ்ரீமத் நாவல்பாக்கம் பெரிய ஸ்வாமி

ஸ்ரீமதுபயவே. நாவல்பாக்கம்.

திருமலை. சதுர்வேத சதக்ரது.

ந்ருஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகன்

(ஸ்ரீ. உ.வே. வித்வான். நாவல்பாக்கம். வீ. நரஸிம்ஹ தாதாசார்ய ஸ்வாமி)

இந்த ஸ்வாமியின் திருவவதாரம் கலியுகத்தில் 4979 ஆவதான ஈச்வர வருஷம் வைகாசி மாஸம் ரோஹிணி நக்ஷத்ரத்தில். ஸ்ரீ ஸ்வாமி, பெரியோர்கள் செய்த தவப்பயனால் ச்ரோத்ரியர்கள் நிறைந்த ச்ரோத்ரிய நாவல்பாக்கத்தில், நாத, யாமுன, குருகைப்பிரான் பிள்ளான் முதலிய மஹநீயர்கள் அவதரித்ததும், விஷ்ணு வ்ருத்த கணம் என ப்ரஸித்தமும் ஆன சடமர்ஷண கோத்ரத்தில், சதுர்வேத சதக்ரது வம்சத்தில், ஸ்ரீவேங்கடாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரராக அவதரித்தார். தாயார் லக்ஷ்மி அம்மாள். வைகாசி மாதம் ரோஹிணி நக்ஷத்ரம், நாவல்பாக்கம் கூடஸ்தரான ஸ்ரீகுமார தாததேசிகன் அவதரித்த நாளாகும். ஸ்ரீ ஸ்வாமியின் மாதுலரான எச்சூர் புரிசை ஸ்ரீ ரங்காசார்ய ஸ்வாமி, தம்முடைய தங்கையான லக்ஷ்மியைச் சோளஸிம்ஹபுரத்துக்கு அழைத்துச்சென்று பெருமாள் ஸேவையைப் பண்ணிவைத்த பிறகு நம் ஸ்வாமி அவதரித்தார். மாதுலரின் நியமனத்தினால் "நரஸிம்ஹாசார்யர்" என்ற திருநாமம் சாத்தப்பெற்றது. கர்ப்பாஷ்டமத்தில் உபநயநாதி ஸம்ஸ்காரங்கள் யதாக்ரமம் நடைபெற்றன.

வேதம் ஓதியதும் காவ்யம் வாசித்ததும்

புரிசையில் தம்முடைய மாதுலராயும் பண்டித பரமைகாந்தியாயும் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியிடம் பதின்மூன்று வயதுக்குள் பூர்ணமாக வேதாத்யயனம் பண்ணிக் காவ்யங்களையும் வாசித்தார். மாதுலரால் ஆசார அநுஷ்டாநங்களில் நன்கு சிக்ஷிக்கப் பெற்றார். ஸ்ரீஸ்வாமி பரமபதிக்கும் பர்யந்தம் தம்முடைய மாதுலரைப் பற்றியும் அவருடைய நியமங்களைப் பற்றியும் அடிக்கடி ஸாதிப்பதுண்டு. சில ஸமயங்களில், "எங்கள் மாமா அநுஷ்டாநம் இப்படித்தான்" என்றும் ஸாதிப்பதுண்டாம். மாதுலரிடத்தில் அளவு கடந்த பக்தியும் விச்வாஸமும் உண்டு.

பிறகு நாவல்பாக்கத்திற்கு எழுந்தருளித் தம் திருத்தகப்பனாரிடமே நாடகாதி க்ரந்தங்களை வாசித்தார். உரிய காலத்தில் பெரியோர்கள் ஸாத்வியான கன்யகையைக் கல்யாணம் செய்துவைத்தார்கள். ஸ்ரீஜயந்திக்கு வேட்டகத்துக்குச் சென்றபோது ஒரு சவரன் மதிப்புள்ள மோதிரம் ஸம்பாவனை செய்தார்கள். மறுநாள் அவர்களிடம் ஊருக்குப் போய் வருவதாகச் சொல்லி, ஸமீபத்திலுள்ள நகரத்தில் அந்த மோதிரத்தை விற்று அந்த ரூபாயை ரயில் சார்ஜுக்கு வைத்துக்கொண்டு மைஸூருக்கு எழுந்தருளியாயிற்று.

மைஸூரில் ந்யாய சாஸ்த்ரம் வாசித்தல்

அங்கே பரகால மடத்தில் அப்பொழுது மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த வஸுதுர்க்கம் ஸ்ரீக்ருஷ்ண ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமியை ஸேவித்து, அந்த நியமனத்தாலே ஹயக்ரீவ ப்ரஸாதத்தைப் பெற்று, அந்த ஸம்ஸ்தானத்தில் ப்ரஸித்த பண்டிதராக எழுந்தருளியிருந்த பண்டிதரத்னம் தர்க்கதீர்த்தம் கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமியிடம் ஸாமாந்ய நிருக்தி பர்யந்தம் ந்யாய சாஸ்த்ரத்தை அப்யஸித்தார்.

வடதேச யாத்திரை

பிறகு அந்த ஸ்வாமிக்குப் பாடம் சொல்ல அஸௌகர்யம் ஏற்பட்டபடியால், ஸதீர்த்யராய் வாசித்திருந்த (பூர்வாச்ரமத்தில்) இஞ்சிமேட்டு ஸ்ரீஅழகியசிங்கர் காசிக்குப் போய் வாசிப்பதாகத் திருவுள்ளம் பற்றி, மத்யே மார்க்கம் க்ருஷ்ணா துங்கபத்ரா முதலான புண்ய தீர்த்தங்களில் தீர்த்தமாடி ப்ரயாகைக்கு எழுந்தருளினார்கள். அங்கே சாஸ்த்ர வச்யர்களாய் முண்டநம் பண்ணிக்கொண்டு சுத்த கங்கையில் ஸ்நாநாதிகளைப் பண்ணிக்கொண்டு ஐந்து தினங்கள்

அவ்விடத்திலேயே இருந்து, பிறகு காசிக்கு எழுந்தருளினார்கள். காசியில் ஸ்ரீ கஸ்தூரிரங்காசார்ய ஸ்வாமிக்கு தர்க்காசார்யரான மஹாராஷ்ட்ர ஸீதாராம சாஸ்த்ரிகளிடம் அநுமான கண்டத்தைப் பூர்ணமாக வாசித்துப் பூர்த்தி செய்தார்கள். காசியில் க்ஷேமீச்வரகாட்டில் வசித்துவந்தார்கள். சில காலத்துக்குள் காசியில் பிளேக் நோய் பரவியதால் இவ்விரு ஸ்வாமிகளும் அவ்விடத்தில் இருந்து புறப்பட்டு, கயைக்குச் சென்று கயா ச்ராத்தம் பண்ணினார்கள். ஸ்ரீஸ்வாமி மட்டும் மைஸூருக்கு எழுந்தருளி ப்ராமாண்யவாத பர்யந்தம் ஸ்ரீ கஸ்தூரி ரங்காசார்ய ஸ்வாமியிடம் வாசித்துப் பூர்த்தி செய்தார்.

வேதாந்த காலக்ஷேபம் பண்ணுதல்

அங்கிருந்து, வலயபட்டை எனும் அக்ரஹாரத்தில் ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்து க்ரந்த சதுஷ்டயத்தையும் காலக்ஷேபம் பண்ணினார். முப்பதாவது வயதில் நாவல்பாக்கத்துக்கு எழுந்தருளித் தன் ஆசார்யரின் நியமனத்தின் பேரில் ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகனது திருத்தமையனாரான ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரரான ஸ்ரீதாதாசார்ய ஸ்வாமியிடம் ச்ருதப்ரகாசிகா, பாவப்ரகாசிகா, சததூஷணி போன்ற க்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்து வைச்வதேவ உபதேசத்தையும் அந்த ஸ்வாமியிடமே பெற்றார்.

அப்பொழுது தர்க்க சாஸ்த்ரத்தை வாசிக்கவந்த அநேக வித்யார்த்திகளுக்குப் பாட ப்ரவசநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். நாவல்பாக்கம் ஸ்ரீமத் அய்யா தேவநாத தாதயார்ய மஹாதேசிகனும் இந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே தர்க்க, மீமாம்ஸா சாஸ்த்ரங்களை அதிகரித்து வேதாந்த காலக்ஷேபம் செய்தார். ஸ்வாமி ஸந்நிதியில் தர்க்கம் வாசித்து ப்ரஸித்தி பெற்ற மற்றொரு ஸ்வாமி, ஸ்வாமி திருமாளிகை ஆராவமுதாசார்யர் என்பவர். ஸ்வாமி ஸந்நிதியில் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை அப்யஸித்த ப்ரஸித்த வித்வான்களில் ஸ்ரீ உ.வே. அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிகனும் ஒருவர். இந்த ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்தவர்களில் அம்மணி தாததேசிகாசார்யர், ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் தர்க்க அத்யாபகராய் ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ உ.வே. சடகோப க்ருஷ்ண தாதாசார்ய (ஸ்ரீமதுபயவே NSR ஸ்வாமியின் திருத்தகப்பனார்) ஸ்வாமி மற்றும் ப்ரஸித்த வித்வான்களான ஸ்ரீ N.S. தேவநாத தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ N.S. ராஜகோபால தாதாசார்ய ஸ்வாமி, சித்தியா சுந்தரராஜாசார்ய ஸ்வாமி, சித்தியா ரங்கநாதாசார்ய ஸ்வாமி, உருதிக்கோட்டை வித்வான் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, நல்லூர் ஸேவா

ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி முதலியோரும் குறிப்பிடத்தக்கோர். இந்த ஸ்வாமி பால்யம் முதலே ஆடம்பரத்தை வெறுத்தவர். ஸ்ரீதேசிகனைப் போல வைராக்யத்தில் நிகர் அற்றவர். திருமாளிகை தேடி வேண்டி வற்புறுத்தி அளித்தாலும் பொருளை ஏற்காதவர்.

கொச்சியில் வாக்யார்த்தம் செய்தது

கொச்சியில் ராமவர்மா என்ற மஹாராஜாவுடன் ஏழு தினங்கள் தர்க்கத்தில் வாதம் செய்து, அவரை ஸ்ரீஸ்வாமி ஜயித்தார். பிறகு மஹாராஜா ஸ்ரீஸ்வாமியை நன்கு பூஜித்து ஸம்பாவணையும் பண்ணினார்.

ஒரு ஸமயம் கொடியாலம் ஸ்ரீவாஸுதேவ ஐயங்கார் வித்வத் ஸதஸ்ஸில் வடதேசத்தில் இருந்து வந்த ப்ரஸித்த வித்வான் ஆன ஸ்ரீ ஹரிஹர சாஸ்த்ரி என்பவரோடு ஸ்ரீஸ்வாமி வாக்யார்த்தம் செய்து ஜயித்தார். மற்றுமுள்ள பண்டிதர்கள் ஸ்ரீ ஸ்வாமியின் பாண்டித்யத்தை வெகுவாகப் போற்றினார்கள். புதுக்கோட்டை, மைஸூர் முதலிய இடங்களில் நடந்த வித்வத் ஸதஸ்ஸில் ஸ்வாமி சுமார் இருபது வருஷகாலம் பரீக்ஷாதிகாரியாக எழுந்தருளியிருந்தார்.

சில காலம் கல்யாணபுரம், மன்னார்குடி முதலிய இடங்களில் வஸித்திருந்தார். திருவிசைநல்லூர் ப்ரஹ்மஸ்ரீ ராமஸுப்பா சாஸ்த்ரிகளிடம் மீமாம்ஸா சாஸ்த்ரத்தைப் பூர்ணமாக அப்யஸித்தார். பிறகு ஸ்வக்ராமம் எழுந்தருளிச் சிலருக்கு தர்க்க சாஸ்த்ரத்தையும் சிலருக்கு மீமாம்ஸா சாஸ்த்ரத்தையும் சிலருக்கு வேதாந்த சாஸ்த்ரத்தையும் போதித்தார். அவர்களை மைஸூர் வித்வத் பரீக்ஷைக்கும் அனுப்பிவைத்தார். அவர்கள் எல்லோரும் அவ்வோ பரீக்ஷைகளில் பூர்ணமாகத் தேறினர்.

ஸ்ரீஸ்வாமி எல்லா இடங்களிலும் தேசிக வ்ருத்தியான உஞ்ச வ்ருத்தியையே பண்ணிப்போந்தார் என்பது ஜகத் ப்ரஸித்தம். 52 திருநக்ஷத்ரம் வரையில் நாவல்பாக்கத்திலேயே எழுந்தருளியிருந்து, பிறகு பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளியாயிற்று. பேரருளாளனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு நவராத்ரி முதலான உத்ஸவ காலங்களில் தீவட்டி பிடித்தல் கைங்கர்யத்தில் மிகுந்த நோக்கு உடையவர். அங்கும் அநேக வித்வான்கள் காலக்ஷேபம் பண்ணியும் பரஸமர்ப்பணாதிகளைப் பண்ணிக்கொண்டும் க்ருதார்த்தரானார்கள். ஸ்வாமிக்குப் பண்டிதர்களாயும் லௌகிகத்தில் ப்ரஸித்தர்களாயும் அநேக சிஷ்யர்கள் உண்டு. ராத்ரி வேளையில் ஸ்ரீமத் பாகவதம், மஹாபாரதம் முதலிய ப்ரவசனங்கள் நடைபெற்றும் வந்திருக்கின்றன.

இந்த ஸ்வாமி ஸந்நிதியில் பரஸமர்ப்பணம் செய்த இளம் தலைமுறையினருள் நாவல்பாக்கம் சடகோப ராமாநுஜ தாதாசார்ய (NSR) ஸ்வாமியும் ஒருவர். இவர் தர்க்க, மீமாம்ஸா, வ்யாகரணம் போன்ற ஸாமான்ய சாஸ்த்ரங்களில் சிரோமணி பரீக்ஷையில் உத்தமோத்தம பாகத்தில் தேர்ச்சி பெற்றவர். அய்யா தேவநாத தாதயார்ய மஹாதேசிகனிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்தவர். இளம் தலைமுறையினருள் நான்கு சாஸ்த்ரங்களிலும் பாடப்ரவசனம் பண்ணக்கூடியவராயும் அத்வைத மத்வ மதஸ்த்தர்களின் ஸதஸ்ஸுக்களில் கலந்துகொண்டு அவர்களாலும் போற்றப்பட்டவராயும் ஒப்பாரும் மிக்காரும் அற்று விளங்குகிறார்.

காலம் சென்ற சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீமான் V.V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் போன்ற மஹநீயர்கள் ஸ்ரீஸ்வாமியிடம் தேவதா ப்ரதிபத்தியோடு இருந்தோர். ஃபெடரல் கோர்ட் நீதிபதியாய் இருந்த சர். எஸ். வரதாசார்யர், ப்ரஸித்தரான ஸ்ரீ A.N.S ராகவாசார்யர் முதலானோர் ஸ்வாமியின் திருவடிகளை ஆச்ரயித்த ப்ரமுகர்கள். தம் திருமாளிகையில் ஸ்ரீதேவாதிராஜனையும் ஸ்ரீநிவாஸனையும் அர்ச்சா மூர்த்தியாக எழுந்தருளப்பண்ணி ஆராதித்து வந்தார்.

அதிதிகள் வந்தால் அவர்கள் தீர்த்த பானமாவது பண்ணிப்போகும்படி நிர்பந்தித்து ஸாதிக்கும்படி இருக்கும். வேதாத்யயனம் பண்ணியவர்களைக் கண்டால் அடங்காத ஆனந்தத்தோடு குசல ப்ரச்நம் பண்ணி உபசரித்தாகும். தம் கார்யங்களைப் பிறரைச் செய்யச் சொல்லாமல் தாமே செய்துகொள்வார். கடைசி வரை யஜ்ஞோபவீதம் நூற்றல் போன்ற கார்யங்களைத் தாமே செய்து வந்தார்.

"காலத்தில் எழுந்திருந்து முழுகி ஸகாலத்தில் ஸந்த்யாவந்தனத்தைப் பண்ணு. பாகவதர்களைப் பழிக்காதே. தினமும் ஸ்ரீபாஷ்யத்தை ஸேவித்து வரவேண்டும். அன்னத்தைப் பழிக்காதே. எப்பொழுதும் த்வயத்தை அநுஸந்தித்து வரவேண்டும்" என உபதேசித்தாகும்.

ஸ்ரீஸ்வாமி அருளிச்செய்த க்ரந்தங்கள்

1. பராப்யுபகத பஹ்வர்த்த விசார:,
2. ஸ்வமதாரோபிததோஷோத்தார:
3. கதிபய அதிகரணார்த்த விசார:
4. சில இடங்களில் பாஷ்ய வ்யாக்யானம்,
5. கதிபயச்ருத்யர்த்த விசார:,
6. ஆநந்தவல்லீ வ்யாக்யா,

7. கட சதுர்த்த வல்லீ வ்யாக்யா,
8. ஸத்வித்யாவ்யாக்யா,
9. ப்ராசீந பாஷ்யபாட நிர்வாஹ:,
10. நிஷ்டா ஸ்வரூபாதி நிரூபணம்,
11. கதிபய ப்ரமேய ஸ்வரூப நிரூபணம்,
12. அதிகரண ஸாராவளீ தத்வ்யாக்யாபராமர்சம்.

இந்த ஸ்வாமி, எந்த வாதத்திலும் வெற்றி இன்றித் திரும்பியது கிடையாது. இந்த ஸ்வாமியின் வைராக்ய அனுஷ்டானங்கள் பற்றிப் பல வித்வான்கள் ச்லாகித்து எழுதியுளர்.

இந்த ஸ்வாமி, சோபகிருது வருஷம் ஐப்பசி மாதம் 11ஆம் நாள் ஏகாதசி அன்று (28/10/1963) திருநாடு அலங்கரித்தார். இந்த ஸ்வாமியின் சரம கைங்கர்யம் ஸ்வாமியின் வைபவத்துக்குத் தக்கபடி மிக்க உயர்ந்த ரீதியில் நன்கு நடைபெற்றது. ஸ்ரீ அக்நிஹோத்ரம் நாராயண தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அய்யா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி முதலிய பெரியோர்கள் கூடியிருந்து கைங்கர்யத்தை நடத்திவைத்ததும் முக்யமாய்க் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

வேதாந்த லக்ஷ்மணமுநே: ப்ராப்தவேதாந்த ஸம்பதே ।
ஸ்ரீமதே சதுராம்நாய ந்ருஸிம்ஹ குரவே நம: ॥

ஸ்ரீமதே ந்ருஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகாய நம:

# # # # # # # # # # # # # # # # # # #

நன்றி:

நாவல்பாக்கம் ஸ்ரீ அய்யா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி சதாபிஷேக மலர்.

ப்ரதி அருளியமைக்காக அநேககோடி க்ருதஜ்ஞதா ரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்:

ஸ்ரீமதுபயவே. திருமலை. சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம்.
வலயபேட்டை. ராமாநுஜ தாதயார்ய மஹாதேசிகன்.



ஸ்ரீ. நரஸிம்ஹதாதயார்ய மஹாதேசிகன்
(நாவல்பாக்கம்)